பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 26 | ஞாயிற்றுக்கிழமை | 12.11.2023 | அதிர்வு 103




வாசகர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
- 'முரசு' குழுமம் -

## தீர்வைத் தராவிடில் சர்வதேச உதவியுடன் அதை வென்றெடுக்கக் களமிறங்குவோம்

### தீபாவளி நாளில் சம்பந்தன் உறுதியாகத் தெரிவிப்பு



- சீ.ஏ. தமிழ்மாறன் -

"அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் நம்பிக்கைக்குரியனவாக இல்லை. அடுத்த வருடத்துக்குள் அரசியல் தீர்வு காண்பேன் என்று கடந்த வருடம் அவர் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். ஆனால், அவர் கூறியமைக்கமைய இந்த வருடம் தீர்வு தொடர்பில் எந்த முன்னேற்றகரமான செயற்பாடுகளும் இதுவரை இடம்பெறவில்லை. அரசு விரைவாகத் தீர்வு காணாவிட்டால் நாம் சர்வதேசத்தின் உதவியுடன் தீர்வை வென்றெடுக்கும் செயற்பாடுகளில் களமிறங்குவோம் என்று இந்தத் தருணத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன்." 06

# தேசிய தேர்தல்களை உடனே நடத்துங்கள்!

### ரணிலைக் கோருகின்றார் சம்பந்தன்

- சீ.ஏ. தமிழ்மாறன் -

**"இலங்கையில் தற்போதைய அரசின் செயற்பாடுகள் சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்துள்ளன. ஜனாதிபதி மீதும், அமைச்சர்கள் மீதும் நாட்டு மக்கள் மாத்திரமல்ல, சர்வதேசம் கூட நம்பிக்கை இழந்து வருகின்றது.** 06



## முதுகெலும்பில்லாதவர்கள் போல் மக்கள் எவரும் இருக்கவே கூடாது!



### கிரிக்கெட்டைப் பாதுகாக்க முன்வாருங்கள்; எதிர்க்கட்சித் தலைவர் சஜித் 'பகீர்' அழைப்பு

"இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் நாட்டுக்குத் துரோகமிழைத்துள்ளது. நாட்டு மக்களே கிரிக்கெட்டைப் பாதுகாக்க முன்வாருங்கள்."

– இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

கொழும்பு, மெரைன் கிரேண்ட் வரவேற்பு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சமூக ஊடக ஆர்வலர்கள் பிரதிநிதிகள் குழுவினருடனான 06

## ரணில் - ராஜபக்ஷ அரசை விரட்ட அணிதிரள்வோம்!

### தேசிய மக்கள் சக்தி அறைகூவல்



"ரணில் – ராஜபக்ஷ அரசு இனியும் ஆட்சியில் தொடர மக்கள் அனுமதிக்கக்கூடாது. இந்த அரசை விரட்டியடிக்க மக்கள் அனைவரும் தேசிய மக்கள் சக்தியின் பின்னால் அணிதிரள வேண்டும். புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களும் தேசிய மக்கள் சக்தியின் கரங்களைப் 06




நாட்டில் அரசியல்வாதிகளின் திருக்கூத்து ஒருபுறம்என்றால், அவர்களுக்கு நாங்கள் ஒன்றும் சளைத்தவர்கள் அல்லர் என்று போட்டிக்கு நிற்கின்றனர் அதிகாரிகள் வர்க்கத்தினர்.

மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் தலைவர் இரண்டு இடைத்தரகர்களை வைத்து ஒரு கோடி ரூபா லஞ்சம் வாங்கிய சமயம் வகையாக மாட்டியுள்ளார். இப்போது அவர் விளக்கமறியலில். 06

# முல்லைத்தீவில் மாவீரர்களின் பெற்றோர் நேற்று கௌரவிப்பு










**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை 11 மணியளவில் தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

மாவீரர்களது பெற்றோர்கள் மங்கள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு முதல் நிகழ்வாக உயிர்த் தியாகம் செய்த 2 மாவீரர்களின் தாயார் சதாசிவம் கமலேஸ்வரி, முன்னாள் போராளி சி.கர்த்தகன் ஆகியோரினால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நிகழ்வின் இறுதியில் மாவீரர்கள் இந்த மண்ணிற்கு ஆற்றிய உயிர்த்தியாகம் தொடர்பான நினைவுரைகள் இடம்பெற்றன. பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கான தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்களான க.விஜிந்தன், க.தவராசா, பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தெதுரு ஓயா, தப்போவ நீர்த் தேக்கங்களில் வான்கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றம்



**(ரஸீன் ரஸ்மின்)**

புத்தளம் மாவட்டத்தில் தெதுரு ஓயா மற்றும் தப்போவ ஆகிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன எனப் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமை நேர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த சில தினங்கள் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக, தெதுரு ஓயாவின் நீர்மட்டம் உயர்வடைந்தமையால், தெதுரு ஓயாவின் எட்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில், நான்கு வான் கதவுகள் நான்கு அடி உயரத்திலும், நான்கு வான் கதவுகள் இரண்டு அடி உயரத்திலும் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் குறித்த நீர்த்தேக்கத்திலிருந்து வினாடிக்கு 15,200 கன அடி நீர் வெளியேற்றப்படுகின்றது.

இதேவேளை, தப்போவ நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையுடன், அதில் இரண்டு வான் கதவுகள் ஆறு அடி உயரத்திலும், இரண்டு வான் கதவுகள் தலா ஒரு அடி உயரத்திலும் திறக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தெதுரு ஓயா மற்றும் தப்போவ ஆகிய நீர்த்தேக்கங்களில் இருந்து நீர் வெளியேற்றப்படுவதால் குறித்த இரண்டு நீர்த்தேக்கங்களை அண்டிய பகுதிகளில் வாழும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமை நேர அதிகாரி கூறினார்.

இந்த அடிப்படையில், வாரியாபொல, நிகவெரட்டிய, மஹறவ, ஆராச்சிக்கட்டுவ, சிலாபம், பல்லம, பிங்கிரிய, ரஸ்னாயக்கபுர ஆகிய பகுதிகளை சேர்ந்த பொதுமக்களும், அந்த பகுதி ஊடாக போக்குவரத்து மேற்கொள்ளும் வாகன சாரதிகளும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT
A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# நல்லூரில் வீதித்தடை

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெறவுள்ள கந்தசஷ்டி உற்சவ காலத்தையொட்டி வீதிகள் தடை செய்யப்படவுள்ளன என்று யாழ் மாநகர சபை அறிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 17 திகதி வரை மற்றும் 19 ஆம் திகதிகளில் பிற்பகல் 5 மணி தொடக்கம் 6 மணிவரையும் 18 ஆம் திகதி சூரன்போரன்று நண்பகல் 12 மணி தொடக்கம் இரவு 7 மணிவரையும் ஆலய சுற்று வீதி தடைசெய்யப்படவுள்ளது.

பொது மக்கள் வீதியைப் பயன்படுத்துவோர் மாற்றுப் பாதைகளை வழமைபோல் பயன்படுத்துமாறு மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் அறிவித்துள்ளார்.




# திருகோணமலை பத்திரகாளி ஆலயத்தில் சிறப்புற நடக்கும் கேதார கௌரி விரதம்



(ஹஸ்பர்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருகோணமலைஅருள்மிகுஸ்ரீஆதிபத்திரகாளிஅம்பாள் ஆலயத்தில் கேதார கௌரி விரதம் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

இவ்விரதம் கடந்த மாதம் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து நாளை திங்கட்கிழமை கூடிய அமாவாசைத் தினத்தன்று நிறைவு பெறுகின்றது.

இருபத்தொரு நாள் அனுஷ்டிக்கப்படும் இவ்விரதத்தில் கடைசி நாளன்று காலை 7.00 மணிக்கு திருக்காப்பு பூஜை ஆரம்பமாகும்.

விரத அன்பர்கள் அனைவரும் அன்றைய தினம் குறித்த நேரத்திற்கு வருகை தந்து அம்பாளின் திருவருளைப் பெற்று, பற்றுச்சீட்டினைச் செலுத்தி புனித திருக்காப்பை பெற்று கையில் அனிந்து கொள்ள முடியும் என திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் ஆதின கர்த்தாவும் பிரதம குருவுமான பிரம்ம ஸ்ரீசோ. இரவிச்சந்திரக் குருக்கள் அறிவித்துள்ளார்.



**RUHBINS HOSPITAL (PVT) LTD.**

**NO. 160, POINT PEDRO ROAD, NELLIYADY, JAFFNA.**

## NOVEMBER 14

# WORLD DIABETES DAY

# DIABETES IS A SILENT KILLER

Approximately
463 M +
From the
World Population

Over
2 M
Sri Lankans are
Diabetes

Every
6 seconds
One person dies
due to Diabetes



## Access to Diabetes Care

### *WELLNESS PACKAGE*

- *HBA1C*
- *Fasing/ Random Blood Sugar*
- *Total Cholesterol*
- *Creatinine & eGFR*
- *Blood Pressure*
- *BMI Assessment*
- *Consultation with Medical Officer*
- *Advice on Lifestyle Modification*

**Special Offer**

**Rs. 5,500/-**

**Offer valid till Dec 14th**

**Hotline:**
**+94772486642**

உங்கள் அன்பிற்குரியவரை நீரிழிவு பரிசோதனை செய்துகொள்ள சொல்லுங்கள், அது அவர்களின் உயிரை பாதுகாக்கும்.

Ruhbins Hospital

No. 160, Pointpedro Road, Nelliyadi, Jaffna

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தென்னிலங்கை கதை. அங்கு அதுதான் நிலைமை. மன்னிக்கவும் வழமை. அதனால்தான் நாடு இந்த சீத்துவ நிலைக்குப் போயிருக்கின்றது என்பதும் கண்கூடு.

இது விடயத்தில் இப்போது வடக்கும் சற்றும் சளைத்தது அல்ல என்று செய்திகள் கசிகின்றன. சாம்பிளுக்கு ஓரிரண்டு விடயங்கள்.

வடக்கில் ஒரு பிரதேச செயலர் சட்டவிரோதமாகக் காணி அனுமதி பத்திரங்களை வழங்கியமைக்காக மாட்டி, இப்போது பணி இடைநிறுத்தத்தில் உள்ளார். விசாரணைகள் நடக்கின்றன. தனக்கும் தனது குடும்பத்தவர்கள், உறவினர்கள் என 17 பேருக்கும் தலா இரண்டு ஏக்கர் நிலத்தை 'வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு உடைத்த கதையாக' வழங்கி, மாட்டிக்கொண்டிருக்கின்றார்.

பிரதேச செயலாளர் தலா இரண்டு ஏக்கரை வழங்கினார் என்றால், கிராம சேவையாளர் ஒருவர் 1964ஆம் ஆண்டு மத்திய வகுப்பு திட்டத்தின் கீழ் பிரித்து வழங்கப்பட்ட 60 ஏக்கர் காணியை இப்போது தாம் ஆட்டையை போட்டு சுவாஹா பண்ணியிருக்கிறார். தனக்கும் தனது இரு சகோதரர்களுக்கும் என தலா இருபது ஏக்கர்படி அவர் சுத்திக் கொண்டாலும், லஞ்ச, ஊழல் ஆணைக் குழுவின் கவனத்திற்கு அது வந்து விட்டது. அவரை இப்போது இருக்கும் கிராம சேவை சேவையாளர் பிரிவிலிருந்து பத்துக் கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள இடத்துக்கு இடம் மாற்றி விட்டு, விசாரணைகளை இப்போது ஆரம்பித்துள்ளனர். அது எங்கே போய் முடியும் என்பது தெரியவில்லை.

இன்னும் இரு கிராமசேவையாளர்களின் விடயமோ மிகச் சிக்கலானது. புலம்பெயர்ந்த இருவருக்கு அந்த நாடுகளில் அரசியல் தஞ்சம் பெறுவதற்காக இவர்கள் தமது கடிதத் தலைப்பில் சான்றுபத்திரம் வழங்கி உள்ளனர். அந்தப் புலம்பெயர்ந்த இருவரின் தந்தைமார் இறுதி யுத்தத்தில் படைத்தரப்பால் கொல்லப்பட்டனர் என்று இவர்கள் சான்றளித்துள்ளனர். அந்தச்சான்றுப்பத்திரங்கள் சம்பந்தப்பட்ட புலம்பெயர் நாட்டில் இருந்து உறுதிப்படுத்தலுக்காக இங்கு உத்தியோகபூர்வமாக அனுப்பப்பட்ட போது இந்த இரு கிராமசேவையாளர்களும் மாட்டி உள்ளனர். விசாரணையில் சம்பந்தப்பட்ட இருவரின் தந்தைமார் இறுதிப்போரில் இறக்கவில்லை என்பதும், அவர்கள் இன்னும் உயிருடனேயே உள்ளனர் என்பதும் உறுதியாகி உள்ளது. இந்தச் சான்று கடிதங்களை வழங்க இரு கிராமசேவையாளர்களும் பெருந்தொகை கையூட்டுப் பெற்ற விடயமும் விசாரணைகளில் அம்பலமாகி உள்ளதாம். இரு கிராமசேவையாளர்களும் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். விசாரணைகள் நடக்கின்றன. விடயம் இறுகினால் நிரந்தர வேலை இழப்பு மட்டுமல்ல, கம்பி எண்ண நேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கின்றன சில வட்டாரங்கள்.

தில்லுமுல்லு செய்யும் அதிகாரிகளுக்கு இந்தத் தகவல்கள் சமர்ப்பணம். எச்சரிக்கையாக இருந்தாலும் உண்மை அம்பலமாகிவிடும். உஷாராக இருப்பதால் பயனில்லை. உண்மையாக இருப்பதும் நேர்மையாகச் செயற்படுவதும்தான் பாதுகாப்பானது.

## முதுகெலும்பில்லாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திப்பில் உரையாற்றும்போதே எதிர்க் கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எப்பொழுதும் பிரிந்து கிடக்கும் நாடாளுமன்றம், நாட்டில் கிரிக்கெட் விளையாட்டைப் பாதுகாப்பதற்கும், கிராமங்கள், நகர மட்டங்களில், மாகாண மற்றும் கிரிக்கெட் கழக மட்டங்களில் அதை அபிவிருத்தி செய்வதற்குமான ஒரு வேலைத்திட்டத்துக்காக ஒன்றிணைந்தன. இந்நிலையில், சர்வதேச கிரிக்கெட் பேரவை நமது நாட்டு கிரிக்கெட்டைத் தடை செய்துள்ளது. எமது சொந்த நாட்டில் உள்ள இலங்கை கிரிக்கெட் பேரவை என்ற அமைப்பே இந்தத் தடைக்கான கோரிக்கையை முன்வைத்துள்ளது.

நமது சொந்த நாட்டில் ஒரு நிறுவனம் நாட்டுக்குச் சேவை செய்ய உருவாக்கப் பட்டாலும், இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தில் தேசத் துரோகிகளே உள்ளனர். அவர்கள் நாட்டிலுள்ள சகல பிரஜைகளுக்குமே துரோகமிழைத்துள்ளனர்.

ஐ.பி.எல். தடைக்கான அறிகுறிகளும் தென்படுகின்றன. இந்தியன் பிரீமியர் லீக் போட்டிக்கான பங்கேற்பும் இழக்கப்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. தங்கள் மோசடி பரிவர்த்தனைகள், ஊழல் பண பரிவர்த்தனைகள் மற்றும் செயல்முறைகளை ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி பாதுகாத்துக்கொள்ள முற்படுகின்றனர். ஜனநாயக முறையில் உருவாக்கப்பட்ட கிரிக்கெட் நிர்வாகத்துக்குப் பல்வேறு தடைகள் வருவதாகவே சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கு அறிவித்துள்ளனர். அவர்கள் அவ்வாறு கூறினால் ஜனநாயக ரீதியில் உருவாக்கப்பட்ட கிரிக்கெட் நிர்வாகத்தின் மீது இலஞ்சம், ஊழல், கப்பம், கொமிசன் போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுமா என்பது பிரச்சினைக்குரியது. நாட்டில் கிரிக்கெட்டை அபிவிருத்தி செய்ய கிடைத்த பணம் கூடத் திருடப்பட்டுள்ளது.

இவ்வாறு பணத்தைத் திருடும் போது முதுகெலும்பில்லாதவர்கள் போல் இருப்பதா என்பதை மக்கள் முடிவு செய்ய வேண்டும். நாடாளுமன்றத்தில் கட்சி பேதமின்றி கிரிக்கெட்டுக்காக ஒன்றிணைந்தது போல் ஜனநாயகம் என்ற பெயரில் 220 இலட்சம் மக்களும் ஒன்று திரள வேண்டும்.

உறவு முறைகள் ஒன்றிணைந்து மேற்கொண்ட திருட்டு மோசடிகளாலேயே நாடு வங்குரோத்தாகியது. இது இலங்கை கிரிக்கெட்டையும் ஆக்கிரமித்துள்ளதால் இதற்கு எதிராக அனைவரும் ஒன்றிணைய வேண்டும்." – என்றார்.

## தேசிய தேர்தல்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவே, உடனடியாக நாடாளுமன்றத் தேர்தலையும், ஜனாதிபதித் தேர்தலையும் நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒத்துழைக்க வேண்டும்."

– இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி முக்கிய கருமங்களில் தான் நினைத்த மாதிரி பிடிவாதமாகச் செயற்படுகின்றார். அமைச்சர்களும் தாங்கள் நினைத்த மாதிரி வெவ்வேறு திசைகளில் பயணிக்கின்றார்கள்.

நாட்டு மக்கள் தொடர்பில் இவர்களுக்குத் துளியளவும் அக்கறை இல்லை. சுயலாப அரசியலே இவர்களின் நோக்கமாக உள்ளது.

இது நாட்டின் முன்னேற்றத்துக்கு உகந்தது அல்ல. எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கமைய உடனடியாகத் தேசிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். தளம்பல் இல்லாத நிலையான ஆட்சி வேண்டும்."

– என்றார்.

## தீர்வைத் தராவிடில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.

அவர் மேலும் கூறுகையில் –

"தீபாவளிப் பண்டிகையை இலங்கையிலும், புலம்பெயர் தேசமெங்கும் இன்று கொண்டாடும் இந்து மக்கள் அனைவருக்கும் எனது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினையால் தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வந்துள்ளார்கள். இப்போதும் அவர்கள் பேரினவாத அடக்குமுறைக்குள் வாழ்ந்து வருகின்றார்கள்.

எனவே, தமிழ் மக்களுக்கு மிக விரைவில் தீர்வு கிடைக்க வேண்டும் என்றும், அதற்கான கருமங்கள் முன்னெடுக்கப்பட நாம் அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் என்றும் இன்றைய தீபாவளித் திருநாளில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அரசியல் தீர்வு விடயத்தில் எமது நிலைப்பாட்டில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை என்பதையும் கூறி வைக்க விரும்புகின்றேன். புதிய அரசமைப்பு கட்டாயம் உருவாக்கப்படவேண்டும். அதனூடாகவேதீர்வு காணப்பட வேண்டும்." – என்றார்.

## ரணில் - ராஜபக்ஷ...

(மதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பலப்படுத்த வேண்டும்."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்த ரணில் விக்கிரமசிங்க இன்று செய்வதறியாது திக்குமுக்காடுகின்றார். அரசியலிலும், விளையாட்டிலும் ஊழல், மோசடியாளர்களைப் பாதுகாக்க முற்படும் ரணில், தானும் ஒரு ஊழல்,மோசடியாளன் என்பதை மறந்துவிட்டார் போல்.

ரணில்-ராஜபக்ஷஅரசைவிரட்டியடிக்க அனைத்து மக்களும் தேசிய மக்கள் சக்தியின் பின்னால் அணிதிரள வேண்டும்."

– என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## எது வரையில் இந்தியா?

தமிழர் தரப்பின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் இந்தத் தீபாவளித் திருநாளில் தமிழ் மக்களுக்கு ஒரு முக்கிய செய்தியை வெளியிட்டிருக்கின்றார்.

அந்தச் செய்தியில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் அவரின் அவநம்பிக்கை அப்படியே வெளிப்பட்டு நிற்கின்றது. அதற்கு அப்பாலும் ஒரு செய்தி அதற்குள் புதைந்து கிடப்பது அவதானிக்கப்பட வேண்டும்.

தமிழர்களின்வாக்குகளையும்அப்படியேமுழுதாகத் திரட்டி, முன் நின்று பெற்றுக் கொடுத்து, தெற்கில் 2015 இல் ஓர் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியவர் சம்பந்தன்.

அப்போது மைத்திரி - ரணில் கூட்டின் மீது அதீத நம்பிக்கை வைத்துச் செயற்பட்டவர் அவர். அதனால்தான் - அந்த நம்பிக்கையில்தான் - 'அடுத்த தீபாவளிக்குள் தீர்வு', 'அடுத்த வருடப் பிறப்புக்குள் தீர்வு' என்றெல்லாம் அவர் நம்பிக்கையுடன் அறிவிக்கும் அவலம் அப்போது நேர்ந்தது.

அந்தப் படிப்பினை - ரணில் உட்பட்ட கூட்டத்தின் யோக்கியதை பற்றிய பட்டறிவு - இந்தத் தீபாவளியின் போது வேறு விதமாக அவரைப் பேச வைத்திருக்கின்றது என்பது தெளிவு.

"அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் நம்பிக்கைக்குரியனவாக இல்லை. அடுத்த வருடத்துக்குள் அரசியல் தீர்வு காண்பேன் என்று கடந்த வருடம் அவர் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். ஆனால், அவர் கூறியமைக்கமைய இந்த வருடம் தீர்வு தொடர்பில் எந்த முன்னேற்றகரமான செயற்பாடுகளும் இதுவரை இடம்பெறவில்லை. அரசு விரைவாகத் தீர்வு காணாவிட்டால் நாம் சர்வதேசத்தின் உதவியுடன் தீர்வை வென்றெடுக்கும் செயற்பாடுகளில் களமிறங்குவோம் என்று இந்தத் தருணத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன்." - என்று சம்பந்தன் நேற்றுத் தெரிவித்திருக்கின்றார்.

சர்வதேசத்தின் உதவியுடன் தீர்வை வென்றெடுப்பதற்கான செயற்பாடுகள் என்று சம்பந்தன் கூறுகின்றமையால், அந்த சர்வதேசம் எது என்ற கேள்வி எழுகின்றது.

இங்குதான் தமிழர் தரப்பு சிந்திக்க வேண்டிய முக்கிய விடயம் பொதிந்து கிடக்கிறது.

சர்வதேசத்தை தமிழர் தரப்பாகிய நாங்கள் நாடுவோம் என்றால், ஒரு நாட்டின் கட்டமைப்பாக இயங்கும் சிங்களமும் சர்வதேசத்தை கையாளுகின்றது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

அவர்களை - சிங்களத்தை - விட சர்வதேசத்தை நாம் சரியாகக் கையாண்டால்தான் சம்பந்தன் கூறுவது போல அந்த களப்போராட்டத்தில் நாம் எதையாவது சாதிக்க முடியும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நமக்குபக்கத்துநாடுஇந்தியா.இந்தியாவுடன் ஒப்பிடுகையில் தொலைவில் இருந்தாலும் இலங்கைக்கு அதிக கடன் வழங்கி உதவும் நாடு சீனா.

இந்தியாவும் சீனாவும் பூகோள அரசியலில் எதிரும் புதிருமாக முட்டுப்படும் சக்திகள். ஆனால் இரண்டையுமே ஒரே சமயத்தில் தந்திரமாகக் கையாளுகின்றது கொழும்பு. ஒன்றைக் காட்டி இன்னொன்றிடம் தேவையானதைக் கறந்து கொள்கின்றது அது.

நாமோ ஒரே பக்கமாக இந்தியாவுடன் நிற்கின்றோம். சீனாவைப் பகையாளிகளாகக் கருதுகிறோம். அது சரியாகவும் உண்மையானதாகவும் இருக்கக்கூடும். அப்படி நாம் இந்திய ஆதரவு நிலைப்பாடு எடுத்து உறுதியாக நிற்பதனால் எங்களைக் கிள்ளுக் கீரையாகக் கருதுகிறது போலும் புதுடில்லி.

இந்தியாவுடன் நிற்பதைத் தவிர தமிழருக்கு வேறு நாதி இல்லை, எங்களுக்கு பின்னால்தான் அவர்கள் ஒண்டி, சுருண்டு நிற்பார்கள் என்ற தைரியத்திலோ என்னவோ எங்கள் விவகாரத்தை தனக்குரிய பொறுப்பு - கடப்பாடு - பற்றுறுதி ஆகியவற்றுடன் இந்திய அணுகவில்லை. அது வெளிப்படையானது.

எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து 2009 வரை ஓர் அத்தியாயம் முடிந்து விட்டது. இப்போது யுத்தம் முடிந்து 15 ஆண்டுகளில் அடுத்த அத்தியாயமும் கடக்க போகின்றது. இன்னும் எத்தனை அத்தியாயங்கள் தாண்டினாலும் இந்தியா மூலம் ஏதும் தீர்வு கிட்டும் என்று நம்புவதற்குஇடமில்லை. திருநாளைப்போவார் போல, 'நாளை இந்தியா தரும்', 'நாளை இந்தியா பெற்றுத் தரும்' என்று இலவு காத்த கிளியாக இருப்பதை தவிர, எமக்கு வேறு வழி சித்திக்கப் போவதில்லை.

சம்பந்தன் கூறுவது போல சர்வதேச உதவியுடன் தீர்வை வென்றெடுக்கும் செயற்பாடுகளில் நாம் களமிறங்குவோம் என்றால், அந்த சர்வதேசம் எது என்பதை நாம் ஓரளவாவது வரையறை செய்து கொள்வது அவசியம். அதில் இந்தியப் பங்களிப்பு எதுவரை என்பதையும் நாம் முடிவு செய்தாக வேண்டும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"பொருள்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது."

- மார்ட்டி ன் லூதர்
(ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)



# ராஜஸ்தானில் 4 வயது குழந்தை துஷ்பிரயோகம்: பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்ட மக்கள்!



ராஜஸ்தானின் தவுஸா மாவட்டத்தில் 4 வயது பெண் குழந்தையை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் பொலிஸ் உதவி ஆய்வாளர் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் தவுஸா மாவட்டத்தின் லால்ஸாட் மாவட்டத்தில்தான் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. புபேந்திர சிங் என்ற நபர் குழந்தையை ஏமாற்றி தனது அறைக்கு அழைத்துச் சென்று துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

பொதுமக்களின் தகவலின் பேரில் பொலிஸார் அந்த நபரைக் கைது செய்துள்ளனர். இது தொடர்பாக பொலிஸ் துணை கண்காணிப்பாளர் ராம்சந்திர சிங் நெஹ்ரா கூறுகையில்,

'கைது செய்யப்பட்ட பொலிஸ் உதவி ஆய்வாளர் புபேந்திர சிங்கிடம் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குற்றவாளிக்கு நிச்சயம் கடுமையான தண்டனை வழங்கப்படும். விரைவில் அவர் பொலிஸ் பணியில் இருந்து பணிநீக்கம் செய்யப்படுவார். கூடவே, பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு பொலிஸ் உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், ரஹுவாஸ் பொலிஸ் நிலையத்தை உள்ளூர் மக்கள் முற்றுகையிட்டனர். பொலிஸுக்கு எதிராகக் கண்டனக் குரல்களையும் அவர்கள் எழுப்பினர். சம்பந்தப்பட்ட பொலிஸ் உதவி ஆய்வாளரை பொலிஸிடம் ஒப்படைக்கும் முன்னர் அவரை உள்ளூர் மக்கள் அடித்துக் காயப்படுத்தினர் என தெரிவிக்கப்படுகிறது. மக்கள் ஆவே சத்துடன் இருப்பதால் அங்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து தகவல் அறிந்து அங்கு சென்ற பா.ஜ.க. எம்.பி. கிரோடி லால் மீனா கூறுகையில்,

சம்பவ இடத்தில் உள்ளூர் மக்கள் ஆவேசத்துடன் குவிந்துள்ளனர். பட்டியலின குழந்தைக்கு நேர்ந்த இந்த அவலுத்துக்கு நீதி கிடைக்க வேண்டும். நான் சம்பவ இடத்துக்கு வந்துள்ளேன். அசோக் கெலாட் காங்கிரஸ் அரசின் திறன் இன்மையால் தான் போலிஸார் சர்வாதிகாரிகள் ஆகிவிட்டனர். பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு பா.ஜ.க. இழப்பீடு தரும் என்று தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தானில் எதிர்வரும் நவம்பர் 25 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த நிலையில், இந்தச் சம்பவம் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்படுகிறது.

ராஜஸ்தானில் தற்போது அசோக் கெலாட் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி நடைபெறுகிறது. அம்மாநிலத்தில் ஆட்சியைப் பிடிக்க பா.ஜ.க. கடும் பிரயத்தனம் செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஏழைகளின் நலனுக்கே முன்னுரிமை: தெலுங்கானாவில் பிரதமர் மோடி உறுதி

எனது தலைமையிலான அரசின் முதன்மையான நோக்கம், ஏழைகளின் நலனே. அனைவருக்கும் சமூக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியாக இருக்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தெலுங்கானாவில் தலித் சமுதாயத்தின் ஒரு பிரிவான மடிகா சமூகத்தினர், மடிகா இடஒதுக்கீடு போராட்ட சமிதி என்ற அமைப்பின் மூலம் உள்ஒதுக்கீடு கோரி போராடி வருகின்றனர். இந்த அமைப்பின் நிறுவனத் தலைவராக மண்ட கிருஷ்ணா மடிகா உள்ளார்.

தெலுங்கானாவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், மடிகா இடஒதுக்கீடு போராட்ட சமிதி சார்பில் ஹைதராபாத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். மோடியின் அருகில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த மண்ட கிருஷ்ணா மடிகா திடீரென உணர்ச்சிவசப்பட்டவராக அழத் தொடங் கினார். பிரதமர் மோடி அவரது தலையை கோதியும், கைகளை இறுகப் பற்றியும் தேற்றினார்.

இதையடுத்து, நிகழ்ச்சியில் பேசிய நரேந்திர மோடி, எனது தலைமையிலான அரசின் முதன்மையான நோக்கம் ஏழைகளின் நலனே. அனைவருக்கும் சமூக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியாக இருக்கிறது. தெலுங்கானா தனி மாநில கோரிக்கையை வலியுறுத்தி நடைபெற்ற போராட்டத்தின்போது, தெலுங்கானா மாநிலம் அமையுமானால் அதன் முதல் முதல்வராக தலித் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர்தான் இருப்பார் என அறிவிக்கப்பட்டது.



ஆனால், தெலங்கானா மாநிலம் உருவான உடன் அதன் முதல் முதல்வராக கே.சந்திரசேகர ராவ் பதவியேற்றார். இதன்மூலம், தலித்துகளின் விருப்பத்தை அவர் நசுக்கிவிட்டார்.

தெலுங்கானா மாநிலத்தை அமைப்பதில் அப்போது மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு தேவையற்ற தாமதத்தை ஏற்படுத்தி அப்பாவிகள் பலர் உயிரிழக்கக் காரணமாக இருந்தது. வரலாற்றின் மிக முக்கியமான தருணத்தில் தெலுங்கானா உள்ளது. இந்தத் தேர்தல் தெலுங்கானாவின் எதிர்காலத்திற்கு மிக முக்கியமானது. தற்போதைய தெலுங்கானா அரசு, தெலங்கானாவின் பாரம்பரிய பெருமையை பாதுகாக்கத் தவறிவிட்டது. மடிகா சமூகம் உள்பட ஒவ்வொரு சமூகத்தின் முதுகிலும் இந்த அரசு குத்திவிட்டது.

காங்கிரஸ் கட்சியும், பாரத் ராஷ்ட்ர சமிதியும் ஒன்றோடு ஒன்றாக உள்ளார்கள். திரைக்குப் பின்னால் அவர்கள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக, இந்த தேர்தலில், ஒரு பக்கம் காங்கிரஸ் கட்சியும் பாரத் ராஷ்ட்ர சமிதியும் உள்ளன. மறு பக்கம் பா.ஜ.க. உள்ளது. மக்கள் மீது அதிகாரம் செலுத்த வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம். ஆனால், மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதே பா.ஜ.கவின் நோக்கம் என்று தெரிவித்துள்ளார்.

# பணயக் கைதிகளை விடுவிக்க பாலஸ்தீன குழுக்கள் நிபந்தனை!



தெற்கு இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பினர் கடந்த மாதம் 7 ஆம் திகதி நடத்திய திடீர் தாக்குதலில் 1,400 இஸ்ரேலியர்கள் மற்றும் வெளிநாட்டினர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலின்போது இஸ்ரேலில் இருந்து சுமார் 240 பேரை காசாவில் உள்ள பாலஸ்தீனிய குழுக்கள் பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றன.

இவர்களில் பெரும்பாலானோர் ஹமாஸ் பிடியில் இருகின்றனர் என நம்பப்படுகிறது. இந்த நிலையில் ஹமாஸ்/டன் இணைந்து இஸ்ரேலுக்கு எதிராகப் போரிடும் இஸ்லாமிக் ஜிகாத் என்ற சிறிய ஆயுதக்குழு தங்களிடம் 30 பணயக் கைதிகள் இருகின்றனர் என ஏற்கெனவே தெரிவித்தது.

இந்த நிலையில் இஸ்லாமிக் ஜிகாத் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் மூதாட்டி ஒருவரையும் ஒரு சிறுவனையும் காணமுடிகிறது. 'எங்கள் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் மனிதாபிமான அடிப்படையிலும் மருத்துவ காரணங்களுக்காகவும் இருவரையும் விடுவிக்க தயாராக இருக்கிறோம் என்று அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அந்த வீடியோவில், சக்கர நாற் காலியில் அமர்ந்தவாறு அந்த மூதாட்டி பேசுகையில், எனக்கு குழந் தைகள் நினைவாகவே உள்ளது. நான் உங்களை அடுத்த வாரம் சந்திப்பேன் என நம்புகிறேன். நாங்கள் மகிழ்ச்சியுடனும் ஆரோக்கியத்துடனும் இருக்கிறோம். நீங்களும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

பணயக் கைதிகளை படம் பிடித்து காசா தீவிரவாதிகள் வெளியிட்டுள்ள 3 ஆவது வீடியோ இதுவாகும். இவர்கள் இதுவரை 4 பணயக் கைதிகளை விடு வித்துள்ளனர். கடைசியாக 85 வயது மற்றும் 79 வயதுடைய இரு மூதாட்டிகள் கடந்த மாதம் 23 ஆம் திகதி இஸ்ரேல் திரும்பினர்.

இந்த நிலையில் இஸ்லாமிக் ஜிகாத் வெளியிட்டுள்ள இந்த வீடியோ குறித்து இஸ்ரேல் அரசு இதுவரை கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜோ பைடனுடன் சீன ஜனாதிபதி இரண்டாவது முறையாக சந்திப்பு

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைட னுக்கும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கும் இடையில் அடுத்த வாரம் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

சென் பிரான்சிஸ்கோவில் எதிர்வரும் 15ஆம் திகதி இந்த சந்திப்பு இடம்பெற வுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக ஜோ பைடன் தெரிவு செய்யப்பட்ட பின் னர், சீன ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடும் இரண்டாவது சந்தர்ப் பம் இதுவாகும்.

இந்த சந்திப்பின் போது இஸ்ரேல் – ஹமாஸ் போர் மற்றும் உக்ரைன் போர் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் அவர்கள் கலந்துரையாடுவர்கள் என சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக் கின்றன.



இந்த ஆண்டு ஆரம்பத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மோசமடைந்தது.

சீனா தமது வான்பரப்பில் உளவு பலூ ன்களை அனுப்பியதாக அமெரிக்கா குற்றம் சாட்டியது.

தெற்கு கரோலினா கடற்கரையில் அமெரிக்க போர் விமானம் ஒன்று, அவற்றை சுட்டு வீழ்த்தியமை குறிப்பிடத் தக்கது.

# ஐஸ்லாந்தில் 800 முறை நிலநடுக்கம்

ஐஸ்லாந்தின் தென் மேற்கு ரெய்க் ஜேன்ஸ் தீபகற்பத்தில் தொடர்ந்து சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

14 மணி நேரத்தில் சுமார் 800 முறை நிலநடுக்கங்கள் ஏற்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

இதில் மிகப்பெரிய நிலநடுக்கமானது 5.2 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கங்கள் எரிமலை வெடிப்புக்கு முன்னோடியாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## தீபாவளி சிறப்பிதழ் - ௨௦௨௩

# இருள் அகன்று ஒளி பிறக்கட்டும் என ஜனாதிபதி ரணில் தீபாவளிச் செய்தி



கொழும்பு, நவ. 12

உலகெங்கும் உள்ள இந்து மக்களினால் கொண்டாப்படும் தீபாவளி பண்டிகையில் எமது மனத்துள்ளே இருக்கும் தீய எண்ணணங்களை நீக்கி ஒளியை உதயமாக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விஷ்ணு பகவானினால் நரகாசுரன் தோற்கடிக்கப்பட்டமையை நினைவுகூரும் வகையில் இந்துக்கள் தீபாவளி பண்டிகையை கொண்டாடுகின்றமையோடு, தனக்கு ஞான ஒளி கிட்டியது போல உலகின் அனைத்து ஜீவராசிகளுக்கும் ஒளிகிட்ட வேண்டுமென நரகாசுரன் விஷ்ணு பகவானிடத்தில் வேண்டினான் எனக் கூறப்படுகிறது.

அதனை நினைவுகூரும் வகையில், அனைவரது மனங்களிலும் ஒளி பிறக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடனேயே இந்து பக்தர்கள் விளக்கேற்றி சமய வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

நாடு என்ற வகையில் நாம் கடந்த இரு வருடங்களில் எதிர்கொண்டிருந்த இருளான யுகத்திலிருந்து மீண்டு, ஒளி நிறைந்த பாதையில் இலங்கை தனது பயணத்தை ஆரம்பித்துள்ள இந்தத் தருணத்தில் நாட்டிற்காகவும் சுபீட்சமாக நாடு மேம்பட வேண்டும் எனவும் பிரார்த்தனையில் ஈடுபடுங்கள்.

அத்துடன் நாட்டில் சுபீட்சத்தின் தீபங்களை ஏற்றி, இலங்கையை வெற்றிப் பாதைக்கு கொண்டு செல்வதற்கும், பல்லின மக்களுக்கு மத்தியில் சமாதானம், சகவாழ்வு, நித்திய நல்லிணக்கத்துடன் கூடிய ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்தவும் இந்த தீபாவளி பண்டிகை வரப்பிரசாதமாக அமைய வேண்டும் என நான் பிரார்த்திக்கின்றமையோடு அனைவர் வாழ்விலும், இன்பமும் நலமும் உண்டாகப் பிரார்த்திக்கிறேன்.

இலங்கை உட்பட உலகம் முழுவதும் உள்ள அனைத்து இந்து பக்தர்களுக்கும் இருளை அகற்றி ஒளி பிறக்க தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் புறக்கணிப்பைக் களைதல் வேண்டும்!

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் விளக்கம்



இந்துப் பக்தர்களின் இதயங்களில் ஒளிமயமானதும் மகிழ்ச்சி நிரம்பியதுமான தீபாவளியைக் கொண்டாடும் இலங்கை இந்து சமூகத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

தீபாவளித் திருநாளின் தீபங்கள் நம் இல்லத்தில் உள்ள இருளை நீக்கி, வெளிச்சம் கொடுப்பதுபோல், நம் இதயங்கள் அன்பு, கருணை, ஒற்றுமை ஆகிய உணர்வுகளால், உண்மையாகப் பிரகாசித்தால், தீபாவளிக் கொண்டாட்டம் மனிதாபிமானமாக இருக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இருளை ஒளியால் வெல்ல வேண்டும். தீமையை நன்மையால் வெல்ல வேண்டும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் புறக் கணிப்பைக் களைய வேண்டும் என்ற நம் பிக்கையை ஒளியின் திருநாளான தீபாவளிக் கொண்டாட்டம் நம்அனைவருக்கும் கொண்டு வரும் நம்பிக்கைச் செய்தியாகும்.

ஒற்றுமை மற்றும் உண்மையின் பண்புகளை புதிய பரிமாணத்திற்கு உயர்த்தி, இந்தத் தீபாவளித் திருநாளில் நாம் பெறும் ஒளியின் மூலம் ஒருவருக்கொருவர் மற்றும் நீதிக்காக ஒரு சிறந்த எதிர்காலத்தையும் சமூகத்தையும் கட்டியெழுப்ப நாம் அனைவரும் உறுதியாக இருக்க வேண்டும் என்பதுஎனது கருத்தாகும்.

மோசடி, ஊழல், திருட்டு ஆகியவற்றை நிராகரித்து, உண்மைக்காகவும் நன்மைக்காகவும் நின்று, மக்களின் எதிர்காலத்திற்காக நேர்மையாகவும், உண்மையாகவும், மனிதப் பண்புடனும், பரிபூரண இதயசுத்தியுடனும் உழைக்கும் தலைவர்களிடமிருந்து நம் நாட்டின் அரசியலை ஒளிரச் செய்வதற்கு இந்தத் தீபாவளியின் தீபங்கள் காரணமாக அமையும் என எதிர்பார்க்கிறேன்.

நீங்கள் அனைவரும் வளமான எதிர்காலத்தை நோக்கி அடியெடுத்து வைப்பதற்கான சரியான பாதைக்கான வழிகாட்டியாக இந்த தீபாவளியின் தீபங்கள் விளக்கட்டும்!

**சஜித் பிரேமதாஸ**
**(எதிர்க்கட்சித் தலைவர்)**

# அனைத்து மனிதரும் சமன் என்ற அறம் வெல்லவும் அநீதி தோற்கவும் அடையாளத் திருநாள் தீபாவளி

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீபாவளி வாழ்த்தில் தெரிவிப்பு



அறம் வென்று, அநீதி தோற்ற தீபாவளித் திருநாளை நம்பிக்கையுடன் வரவேற்போம்!

இன்பங்கள் நிலைத்து, துன்பங்கள் நீங்கி, எல்லா மனிதரும் சமன் என்ற அறம் வெல்லவும் அநீதி தோற்கவும் ஓர் அடையாளத் திருநாளாகத் திகழும் தீபாவளித் திருநாளை நம்பிக்கையுடன் வரவேற்போம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் நாயகமும் அமைச்சருமான

டக்ளஸ் தேவானந்தா தனது தீபாவளி வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் கூறியவை வருமாறு:–

மனித குலத்தின் மகத்தான வாழ்வின் வெற்றி என்பது புதிய உலகு நோக்கி நிமிர்ந்தெழும் காலத்தைப் படைப்பதே ஆகும்.

யாமார்க்கும் அடிமையல்லோம்,யமனை அஞ்சோம் என்ற எமது மக்களின் நம்பிக்கைகள் வெல்லவும் –

முயல்வோம்.., வெல்வோம்.., நிமிர்வோம்.., உளம் சோரோம் என்ற எமது இலட்சியப் பயணம் எண்ணிய இலக்கை எட்டவும் –

நாம் இடையறாது உழைப்போம்!

எம் தமிழ் தேசம் தலை நிமிரவும், அரசியல், பொருளாதார, சமூக சமத்துவ நீதி ஓங்கவும், பாமர மக்களின் வாழ்வுயரவும், உழைக்கும் மக்களின் உரிமைகள் வெல்லவும், அழிவாயுதங்கள் அன்றி அறிவாயுதம் ஒன்றே

மாற்று வழியென நாம் பாதையை மாற்றினோம். பயணத்தை நிறுத்தவில்லை.

தீபாவளித் திருநாள் என்பது வெறுமனே புத்தாடை அணியவும், பொது விழாக்களை நடத்தவும், பட்டாசு கொழுத்திக் கொண்டாடி மகிழவும் உண்டாகிய நாள் மட்டுமல்ல, மாறாக, மாற்றமொன்று எங்கள் மண்ணில் மலர்ந்ததை கொண்டாடும் பெருநாளாக அது மலர வேண்டும்.

அழிவு யுத்தத்தின் அநீதிகளைக் கடந்து வந்த எமது மக்கள் நிம்மதிப் பெருமூச்சை இன்று விடுகின்றனர்.

அந்த நிம்மதிப் பெருமூச்சு சுதந்திரக்காற்றாக எமது மண்ணில் நீடித்து வீச வேண்டும்.

மாற்றமொன்றே எமக்கு தேவை. மாற்றங்களை எமது மண்ணில் உருவாக்கி காட்டுவதற்கு மாறாக, நாளாந்தம்,வாராந்தம், மாதாந்தம் எனப் புதிய புதிய பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றனர்.

அவற்றை ஊதிப. பெரும்பித்து, மக்களை உசுப்பேற்றி, கூச்சலிட்டும் வருகின்றனர்.

அதன் மூலம் அடுத்த தேர்தல் போட்டிக்கான அத்திவாரங்களே இங்கு நடந்தேறி வருகின்றன.

தேர்தலுக்காக அன்றி எம் தமிழ் தேசத்திற்காக தியாகங்களை ஏற்று நடக்கும் எமது யதார்த்த வழிமுறை மீது யாரும் சேற்றை வாரித்தூற்றுவோர் முடிந்தளவு தூற்றட்டும்.

நாம் நேசிக்கும் மக்களுக்கான நிரந்தர விடியலை எட்டும் எமது இலட்சிய பயணத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அவதூறு பொழிவோரை எதிர்கொண்டு நாம் பயணிப்பதே இன்று நாம் ஆற்றும் தியாகங்கள்.

கூச்சல்களாலும், கொக்கரிப்புகளாலும் எந்தக் கோட்டையின் கதவுகளும் திறக்காது.

அழகார்ந்த உரிமை வாழ்வை சகல மக்களும் அனுபவித்து நிமிர வேண்டும்.

இல்லங்கள் தோறும் துயரங்கள் அற்ற மகிழ் வாழ்வு மலர வேண்டும்.

தீபாவளித் திருநாளின் அர்த்தங்கள் தேசமெங்கும் தீப ஒளியாகத் துலங்க வேண்டும்.

அறம் வெல்லும்,அநீதி தோற்கும்!!

– இவ்வாறு தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# இறை தீர்ப்பு ஒன்று உண்டு என்ற நம்பிக்கையோடு நாம் வாழ்வோம்

## தீபாவளிச் செய்தியில் செஞ்சொற் செல்வர் வழிகாட்டல்



இவ்வுலகம் இறைவனின் படைப்பு. எல்லோரும் இன்புற்று வாழ்வதற்கு இறைவன் நல்ல இயற்கையைப் படைத்தான். மண்ணில் வாழும் மனிதர்கள் பிறவியின்மகிமையை உணர்ந்து நல்லவண்ணம் வாழ வேண்டும். அதாமத்தின் வழியில் நின்றவர்கள் அழிந்து போவார்கள். அதனை உணாத்துகின்ற திருநாளே தீபாவளி.

நரகாசுரன் என்ற அசுரன் பலரை வருத்தினான். அருள் கொடுத்த இறைவன் அறத்தின் பால் நின்று அவனை அழித்தான். வாழும் மனிதர்கள் ஒவ்வொருவரும் கடவுள் தந்த வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு நன்றியோடு வாழ வேண்டும். பிறர்க்கு உதவவேண்டும். ஆணவத்தால் பிறரை வருத்தக்கூடாது. அகந்தை என்னும் இருளில் இருந்து நாம் வெளியே வரவேண்டும். ஒளியேற்றிக் கொண்டாடும் தீபாவளி உயர்ந்த கருத்தை விளக்கி நிற்கிறது.

உலகில் உயர்ந்த தர்மம் நிலைக்க வேண்டும். அநியாயமாகப் போர்களின் வலுவால் ஒன்றுமறியா அப்பாவிக் குழந்தைகள் அல்லலுறுவதைக் காண்கிறோம். எங்கள் மண்ணில் நீதி, நியாயத்துக்கு ஆபத்து வந்துவிட்டது. இறை தீர்ப்பு ஒன்று உண்டு என்ற நம்பிக்கையோடு நாம் வாழ்கிறோம். எப்பவோ ஒருநாள் தர்மம் நிலைக்கும். அதனை அனைவரும் எதிர்பார்ப்போம்.

தீபத்திருநாளில்“ அனைவரும் திருக்கோவில்களுக்குச் சென்று பிரார்த்திப்போம். நீதி நிலைத்து நிம்மதியாக அனைவரும் வாழத் தெய்வங்களை மன்றாடுவோம். உற்றார், உறவினர் நண்பர்களுக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து அவர்களின் நல்லாதரவைப் பெறுவோம். ஆனந்தமாக அனைவரும் வாழ எனது இதயபூர்வமான ஆசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன்.

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன்.**

(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை.
உப தலைவர்,
அகில இலங்கை இந்துமாமன்றம்.)

✪✧✪✧✪✧✪

# தீய எண்ணங்கள், குணங்கள் அடியோடு நீங்கி அனைவர் வாழ்விலும் இன்பம் உண்டாகட்டும்!

## இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் வாழ்த்து



அனைவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும்.

உலகெங்கும் உள்ள தமிழர்கள், இந்துக்களினால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் தீபாவளி முக்கிய வகிபாகம் வகிக்கிறது. இப்பண்டிகை தொடர்பாக பல்வேறு புராண சான்றாதாரங்களும் கதைகளும் காணப்படுகின்றன. மகிழ்ச்சி பொங்க ஊர், உறவுகளுடன் கூடி இணைந்து, மகிழ்ச்சியடையும் பண்டிகையாக இது காணப்படுகிறது.

இத்தருணத்தில் எமக்கு தேவையான விடயம் அமைதி.

ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான விடயம் அன்பு, மன்னித்தல், புரிந்துணர்வு, பிழையை ஏற்றுக்கொள்தல், ஏனையவர்களை மதித்து நடத்தல், சகோதரத்துவம் இவையே.

மனிதநேய ஒருமைப்பாட்டை தமது வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்வதற்கு பண்டிகைகள் துணைபுரிகின்றன.

இன்றைய தினத்தில் ஒவ்வொரு மனிதருள்ளும் இருக்கும் தீய எண்ணங்கள், குணம் என்பன நீங்கி ஒளி பொருந்திய மன எண்ணத்தில் அனைவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும். நிறை மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட வேண்டும். அனைவர் மனதிலும், வாழ்விலும் வளமும் நலமும் பலமும் பெற்று இன்பகரமாக வாழ இத் தீபத்திருநாளில் ஓர் வழி கிடைத்திட வேண்டும் என அன்பே உருவான பரம் பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து, மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

**சிவாகமகலாநிதி. சிவஶ்ரீ.**
**கு.வை.க.வைத்தீஸ்வர குருக்கள்**
(தலைவர், இந்துக் குருமார் அமைப்பு)
சிவஸ்ரீ.ச.சாந்தரூப குருக்கள்
(செயலாளர், இந்துக் குருமார் அமைப்பு)

# யுத்தங்கள் முடிவுக்கு வந்து மக்கள் நிம்மதியாக வாழ தீபாவளித் திருநாள் நல்வழி சமைக்கட்டும்

## மன்னார் மாவட்ட இந்து மத பீடத் தலைவர் மஹா தர்மகுமார குருக்கள் ஆசி



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

தீபாவளித் திருநாளில் உலகத்தில் இடம் பெற்று வருகின்ற யுத்தங்கள் எல்லாம் முடிவுக்கு வந்து, மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழ்வதற்கும், எல்லா மதங்களையும் மனித நேயத்துடன் மனிதர்கள் மதித்து வாழ்வதற்கும் ஒரு முன்னுதாரணமாக இந்த நாள் அமைய வேண்டும் என மன்னார் மாவட்ட இந்து மத பீடத்தின் தலைவர் செந்தமிழ் அருவி கலாநிதி சிவசிறி மஹா தர்மகுமார குருக்கள் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள தீபத் திருநாள் வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டவை வருமாறு:-

உலகம் முழுவதும் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற இந்து மக்கள் இன்றைய நாளை இனிய தீபாவளி நாளாக கொண்டாடி வருகின்றனர். இந்தத் தீபாவளி திருநாள் என்பது நரகாசுரன் கிருஷ்ண பரமாத்மாவாலே அழிக்கப்பட்ட ஒரு நாளாக நினைவு கூறப்படுகிறது.

நரகாசுரன் என்பவன் அசுரன் மட்டுமல்ல, எங்களுக்குள்ளே இருக்கக்கூடிய அசுரனை நாங்கள் ஒவ்வொருவரும் வதம் செய்ய வேண்டும் என்ற நோக்கிலே இருள் அகன்று ஒளியேற்றி கொண்டாடப்படுகின்ற ஓர் உன்னதமான பண்டிகையாக இந்து மக்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தீபாவளி என்பதன் பொருள் தீபங்களை வரிசையாக ஏற்றி வழிபடுதல் என்பதாகும்.

எனவே இன்றைய தீபாவளி திருநாளில் உலகத்தில் இடம்பெற்று வருகின்ற யுத்தங்கள் எல்லாம் முடிவுக்கு வந்து மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழ்வதற்கும், எல்லா மதங்களையும் மனித நேயத்துடன் மனிதர்கள் மதித்து வாழ்வதற்கும் ஒரு முன்னுதாரணமாக இந்த நாள் அமைய வேண்டும்.

இதற்கு எல்லாம் வல்ல இறைவனுடைய அனுக்கிரகம் கிடைக்க வேண்டும் என்பதோடு, அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். - எனத் தெரிவித்தார்.




# வவுனியாவில் நேற்று சூடு பிடித்த தீபாவளிப் பண்டிகை வியாபாரம்

இந்துக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான தீபாவளி பண்டிகை இன்று கொண்டாடப்படும் நிலையில் வவுனியாவில் தீபாவளி பண்டிகை வியாபாரம் நேற்றுக் களைகட்டியிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

குறிப்பாக சிறுவர் முதல் பெரியவர் வரை தமக்கான புத்தாடைகள், வெடிபொருள்கள் மற்றும் இனிப்பு பண்டங்களை வாங்கிச் சென்றமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அதிக எண்ணிக்கையான மக்கள் நகரில் குவிந்தமையால் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இதேவேளை வவுனியாவினை சூழ அதிகளவான அங்காடி வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டும் வியாபார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.












# தீபாவளித் திருநாள் வியாபாரம் மன்னாரில் சோபை இழந்தது!

(மன்னார் நிருபர்)

நாட்டில் நிலவி வரும் சீரற்ற கால நிலை காரணமாகவும், பொருளாதார நெருக்கடி காரணமாகவும், பொருள்களின் விலை ஏற்றம் காரணமாகவும் நேற்றைய தினம் மன்னார் மாவட்டத்தில் தீபாவளிக் கொண்டாட்டத்திற்கான பொருள்களைக் கொள்வனவு செய்வதில் மக்கள் அதிகம் ஆர்வம் காட்டவில்லை.

குறிப்பாக பொருள்கள் மற்றும் ஆடைகளின் விலைகள் அதிகரித்துள்ளமையினால் மக்கள் அவற்றின் கொள்வனவில் அதிகம் ஆர்வம் காட்டவில்லை.

மேலும் நிலவி வரும் சீரற்ற கால நிலை காரணமாக மன்னார் பஜார் பகுதி உள்ளடங்கலாக மாவட்டத்தின் பல பாகங்களிலும் மக்களின் நடமாட்டம் குறைவடைந்தும் காணப்படுகின்றது.

இதனால் மன்னாரில் தீபாவளி வியாபாரம் களையிழந்துள்ளது.













# அடுத்து வரும் சில தினங்களுக்கு மழையுடனான வானிலை நீடிக்கும்



நாட்டில் நிலவும் மழையுடனான வானிலை எதிர்வரும் சில தினங்களுக்கு மேலும் அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், மத்திய, சப்ரகமுவ, தென் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் குருநாகல் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் 100 மில்லிமீட்டர் வரையான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலான பகுதிகளில் மாலை வேளையில் மழை பெய்யக்கூடுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும். இதன்போது ஏற்படக்கூடிய அனர்த்தங்களைத் தவிர்த்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.




# சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் இரண்டு வாரங்களில் வெளியியாகும்

2022 ஆம் ஆண்டிற்கான சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள் இன்னும் இரண்டு வாரங்களில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதற்கான பணிகளை பரீட்சைகள் திணைக்களம் தற்போது முன்னெடுத்து வருகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டிற்கான சாதாரண தர பரீட்சை அடுத்த ஆண்டு மே மாதம் நடைபெறவுள்ளது எனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பரீட்சை அட்டவணையை அடுத்த வருடம் வழமைக்கு கொண்டு வரத் திட்டமிடப்பட்டிருந்தாலும், அது மேலும் ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# ஒரு கோடி ரூபா லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைதான சுற்றாடல் அதிகார சபைத் தலைவருக்கு விளக்கமறியல்

ஒரு கோடி ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் உள்ளிட்ட மூவரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதம நீதவான் நீதி மன்றத்தில் நேற்று ஆஜர்ப்படுத்தப் பட்ட போது, சந்தேகநபர்களை எதிர் வரும் 13 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தர விட்டது.

மண்ணெண்ணெய் சுத்திகரிப்புத் திட்டம் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை வழங்கும் வருடாந்த சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத் திரத்தை வெளியிடுவதற்காக அதி கார சபையின் தலைவர் லஞ்சம் கோரியுள்ளார்.

இரண்டு இடைத்தரகர்கள் மூலம் பணத்தை பெற்றுக்கொண்ட சந்தர்ப் பத்திலேயே மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் உள்ளிட்ட மூவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட னர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பாகிஸ்தானிலிருந்து இறக்குமதியான மிளகாயில் நச்சு இரசாயனம் திருப்பி அனுப்ப நடவடிக்கை!

## 25 கொள்கலன்களில் வந்தவையாம்

பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிளகாய்களில் அஃப்லா டாக்சின் (யுகடயவழஒலை) நச்சு இர சாயனம் கலந்திருந்தமையி னால், அவற்றை மீள ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

25 மிளகாய் கொள்கலன்கள் இவ்வாறு திருப்பி அனுப்பப்படவுள் ளன என சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையை சேர்ந்த வர்த்த கர்கள் குழுவொன்று இந்த மிளகாயை இறக்குமதி செய்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில், உணவின் தரம் தொடர்பான பிரச்சினைகளை தெரி விக்க, சுகாதார அமைச்சு தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

உணவு தொடர்பான பிரச்சினை களை 0112112718 என்ற தொலை பேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 12.11.2023




இன்று ஆக்கப்பூர்வமான நாளாக அமையும். நீங்கள் புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகள் இன்று உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் உற்சாகத்துடன் சிறப்பாக பணிகளை செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்புணர்வுடன் நடந்துகொள்வீர்கள். இருவரும் உறவின் மதிப்பை உணர்ந்து ஒருவர் மற்றவர் மீது அன்பு செலுத்துவீர்கள்.

இன்று உங்களின் பணத் தேவைகள் பூர்த்தியாகலாம். உங்கள் சேமிப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாளின் போக்கைக் கண்டு நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். உங்கள் கனவுகளும் விருப்பங்களும் நிறைவேறும். தொலை தூரத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கப்பெறுவீர்கள்.

இன்று மிகுந்த ஆற்றலுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள். தொழில் சம்பந்தமான பயணம் மேற்கொள்வீர்கள்.

உங்கள் வாழ்க்கைத் துணையிடம் நீங்கள் மிகவும் அன்பாக நடந்து கொள்ள முயற்சிப்பீர்கள். உங்கள் உறவு சிறப்பாகும். இருவரும் மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் இருப்பீர்கள்.

உங்களிடம் அதிக அளவில் பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். அது உங்களுக்கு மன நிறைவைத் தரும்.

இன்று கண் சம்பந்தமான பிரச்சினைகளும் முதுகு வலியும் ஏற்படலாம்.




உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் தேவை. வேகத்தை தவிர்க்க வேண்டும். சிறப்பாக திட்டமிட்டால் நல்ல பலன்களைப் பெறலாம்.

அமைதியாகவும் எதிலும் தலையிடாமல் இருப்பதன் மூலம் உணர்ச்சிவசப்படாமல் இருக்க உதவும். பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரும். என்றாலும் உங்கள் திறமை மூலம் சமாளிக்கலாம். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையின் தேவைகளை புரிந்துகொண்டு நடந்து கொள்ளுங்கள். உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையை ஏமாற்றாமல் இருக்க முயலுங்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படலாம். நிதி நிலையை கண்காணிப்பதன் மூலம் ஸ்திர நிலையைக் காணலாம்.




நீங்கள் இன்று செய்யும் எந்தச் செயலிலும் நம்பிக்கையும் உறுதியும் தேவை. இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லாத போதிலும் உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் மனதில் எதிர்மறை எண்ணம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று அதிகப்படியான பணிகளை சந்திக்க நேரலாம். பணிகளை ஒழுங்குபடுத்தி முன்னுரிமைப்படி செய்தால் குறித்தநேரத்தில் முடிக்க இயலும். இதனால் பணியில் மனநிறைவைப் பெறலாம்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையில் இடைவெளி அனுமதிக்காதீர்கள். இன்று நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படலாம். இந்தப் போக்கை தவிர்ப்பது நல்லது. உங்கள் துணையுடன் நட்போடு நடந்து கொள்ளுங்கள்.




உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் அனுபவத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள். இதனால் வெற்றி பெற்ற மனிதராக ஆவீர்கள்.

இன்றைய வெற்றியின் ரகசியம் சிறந்த திட்டமிடல் ஆகும். அட்டவணையிட்டு பணி செய்தால் பணிகளை சுமூகமாக செய்ய இயலும்.

உங்கள் துணையிடம் பொறுமையாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் உறவை நல்லுறவாக்க இது மிகவும் அவசியம்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியமாய் இருக்க உடற்பயிற்சியும் தியானமும் அவசியம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.




முன்கூட்டிய திட்டமிடலும் கவனமும் இன்று மிகவும் அவசியம்.பிரார்த்தனை இன்று நல்ல பலன் தரும்.

இன்று சிறந்த பலன்களைக் காண்பதற்கு திட்டமிட வேண்டியது அவசியம். உங்கள் முயற்சியில் நேர்மை தேவை.

உங்கள் துணையைப் புரிந்துகொண்டு அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். அன்பை ஒருவருக்கொருவர் கொடுத்துப் பெறுவதன் மூலம் உறவு சுமூகமாக இருக்கும்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இதனால் மகிழ்ச்சியின்மை காணப்படும். இன்று செலவுகள் அதிகமாக காணப்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் வேண்டும்.




உங்கள் தைரியம் மற்றும் உறுதி காரணமாய் வெற்றி கிடைக்கும். நீங்கள் செய்யும் செயல்களை நம்பிக்கையுடன் செய்யுங்கள். அமைதியாய் இருக்க இசை கேளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கையாள்வது எப்படி என்று தெரிந்து கொள்ளுங்கள். இது உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அமர்ந்து பேசுங்கள். இருவரும் கலந்து பேசுவதன் மூலம் உறவின் தேவையை புரிந்து கொள்ள முடியும்.

பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம். நிதிநிலையை கண்காணிப்பதன் மூலம் பண இழப்பை தடுக்கலாம்.




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் / மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.11.2023




இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாக குறித்த நேரத்திற்கு முன் முடிப்பீர்கள்.

பணியில் புதிய மைல் கல்லை அடைவீர்கள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் பணியை நீங்கள் கையாளும் விதத்தையும் உங்கள் வேகம் மற்றும் துல்லியத்தையும் உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சந்திப்புகளும் இணைந்து செயல்படுவதும் மகிழ்ச்சியை அதிகரிக்கும்.

இன்று உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யம் அளவிற்கு பணப்புழக்கம் காணப்படும். உங்கள் சேமிக்கும் திறன் அதிகரிக்கும்.




நீண்ட கால திட்டங்ககளை அமைப்பது அவசியம். இன்று வாழ்வின் சௌகரியங்களுக்கு பணம் சம்பாதிப்பீர்கள். இன்றைய சம்பவங்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள்பணியில்மகிழ்ச்சியும்திருப்தியும் காணப்படும். உங்கள் பணியில் உற்சாகத்தைக் காண்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நீங்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். திரைப்படம் காண அல்லது பொழுதுபோக்க என வெளியிடங்களுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

வீட்டில் சுப நிகழ்சிகளுக்காக பணம் செலவு செய்வதில் மகிழ்ச்சி காண்பீர்கள். பணத்தை உரிய முறையில் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாகவும் ஸ்திரமாகவும் இருக்கும்.




இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும். இதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும். தேவையற்ற ஏமாற்ற உணர்வுகளை தவிர்த்திடுங்கள்.

பணியில் உங்களின் நிஜமான திறமையை காண்பிப்பீர்கள். பணிகளை கவனமாகக் கையாண்டால் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் துணையிடம் அமைதியாக நடந்துகொள்ளுங்கள். நச்சரிக்கும் வகையில் எதையும் கூறாதீர்கள். அவருடன் அதிக நேரம் செலவிடுங்கள்.

செலவுகள் அதிகமாக காணப்படும். என்றாலும் இன்று பணத்தை திறமையாக கையாண்டால் இன்றைய நாள் சுமூகமாக இருக்கும்.

இன்று பதட்டமுடன் காணப்படுவீர்கள். இதனால் தலைவலி ஏற்படலாம்.




இன்று கவனமாகவும் சாமார்த்தியமாகவும் செயல்களை செய்ய வேண்டும். சிறு கவனச் சிதறல் காரணமாகக் கூட தவறுகள் நேரலாம்.

உங்கள் பணிகள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும் அளவிற்கு இருக்காது. மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்தால் விரைவில் பாராட்டைப் பெற இயலும்.உங்கள் பணிகளின் தரத்தை எதிர்மறை எண்ணங்கள் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று முக்கியமான விஷயங்களைப் பற்றி உங்கள் துணையிடம் பேசாதீர்கள். சாதாரணமாகப் பேசுங்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண இது மிகவும் அவசியம்.

அதிகரிக்கும் செலவுகளைக் கண்டு கவலை கொள்ளாதீர்கள். பணம் பயனுள்ள வகையில் செலவாகும். எனவே கவலை வேண்டாம்.




Discover the Ultimate Investment &
Dynamic Destinations
which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane. Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# கிரிக்கெட் தடையை நீக்க அரசு முழு அளவில் முயற்சி

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தகவல்

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலினால் இலங்கைக் கிரிக்கெட் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கு நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தத் தடையை நீக்குவதற்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலுடன் (ஐ.சி.சியுடன்) பேச்சு நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் செயற்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் மிகவும் ஊழல் நிறைந்த நிறுவனம் என்பது இந்நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ஏற்றுக்கொள்ளும் உண்மையாகும்.

எனவே இதனைத் தேசியப் பிரச்சினையாகக் கருதி, இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தில் ஊழலை இல்லாதொழிக்கும் நோக்கில் நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஒன்றுபட்டு தீர்மானம் நிறைவேற்றினர். இது அரசியல் தலையீடு அல்ல.

இலங்கைக் கிரிக்கெட் அமைப்பின் தலைவர் ஷம்மி டி சில்வாவின் வேண்டுகோளுக்கு இணங்க சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் இலங்கைக் கிரிக்கெட்டுக்குத் தடை விதித்ததாக கிரிக்இன்போ இணையத்தளம் உட்பட பல சர்வதேச ஊடகங்கள் தற்போது செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கைக் கிரிக்கெட் இந்த நாட்டு மக்களின் பொதுச் சொத்தே தவிர, அவரது தனிப்பட்ட சொத்து அல்ல. அவ்வாறு கோரிக்கை விடுத்திருந்தால் அது நாட்டிற்குச் செய்யும் துரோகமாகும். விஷயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊழல் நிறைந்த நிர்வாகக் குழுவின் கொடுங்கோன்மைக்கு எதிராக அனைத்துக் கிரிக்கெட் பிரியர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென.

இந்நாட்டில் சுமார் பத்தாயிரம் பாடசாலைகளில் சிறுவர்கள் கிரிக்கெட்டில் ஈடுபட்டுள்ளனர். இந்த நாட்டில் கிரிக்கெட் உரிமையை மீளப் பெற வேண்டும் என்பதே அந்தச் சிறுவர்கள் மற்றும் ஒவ்வொரு குடிமகனின் எதிர்பார்ப்பு. அதற்காக அரசாங்கம் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. – என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.






## இலங்கை அணியின் உலகக் கிண்ண தோல்விக்குப் பின்னால்

# சதித்திட்டம்!

## ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் விளையாட்டு அமைச்சர்

“இலங்கைக் கிரிக்கெட் அணியின் படுதோல்விகளின் பின்னணியில் ஏதேனும் சதித்திட்டம் காணப்பட்டால், அதனுடன் தொடர்புடைய சதிகாரர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கமைய கிரிக்கெட் அணித் தெரிவுக்குழுவின் தலைவர் பிரபோத்ய விக்கிரமசிங்க தெரிவித்துள்ள கருத்து தொடர்பில், அரசாங்கம் கரிசனை கொண்டுள்ளது எனவும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ஹோஹண திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கைக் கிரிக்கெட் அணியுடன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நாடு திரும்பிய போது, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட கிரிக்கெட் அணித் தெரிவுக் குழுவின் தலைவர் பிரமோத்ய விக்ரமசிங்க,

“நடப்பு ஆண்டின் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி எதிர்கொண்ட மிக மோசமான தோல்விகளுக்கு வெளியே தீட்டப்பட்ட சதித் திட்டமே காரணம், இது தொடர்பான அனைத்துத் தகவல்களும் இன்னும் ஓரிரு நாட்களில் வெளியிடப்படும்” எனத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இராஜாங்க அமைச்சரிடம் கேட்டபோதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

“இலங்கை அணியின் தோல்வியின் பின்னணியில் எவரும் அறியாத உள்ளகக் காரணிகளை அவர் இனங்கண்டிருக்கக் கூடும்.

எனவே, அவரது கூற்றின்படி இதற்கு எவரேனும் பொறுப்புக் கூற வேண்டுமெனில், அவர்கள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

அதற்கமைய தெரிவுக்குழுவின் தலைவர் பிரமோத்ய விக்கிரமசிங்கவினால் உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டதன் பின்னரே எம்மால் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

பிழைகளைத் திருத்திக் கொண்டு எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியும். எனவே, அவ்வாறு ஏதேனும் காரணிகள் காணப்பட்டால் அவை முன்வைக்கப்படுமானால் அது சிறந்ததாகும்.

கிரிக்கெட் போட்டிகளில் தோல்வியடைந்தது போதும். புதன்கிழமைப் போட்டியில் கடைசி நிமிடத்திலாவது இலங்கை வென்று விடும் என்ற எதிர்பார்ப்புடனேயே முழு நாட்டு மக்களும் எதிர்பார்த்திருந்தனர்.

அந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. எனவே இனியாவது இவ்வாறான தோல்விகள் ஏற்படாமல் தவிர்க்க வேண்டும்.” என்றார்.

இதன்போது, இலங்கைக் கிரிக்கெட் மீது சர்வதேச தடை விதிப்பது தொடர்பில் சினமன் ஹோட்டலில் பேச்சு இடம்பெற்றது எனவும், அதன் பின்னணியில் ‘ஷா’ என்ற ஒருவர் காணப்படுகிறார் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் அமைச்சு ஆராய்ந்ததா? இதன் உண்மை தன்மை என்ன எனக் கேட்கப்பட்டபோது,

“உண்மையில் இது அரசியல் தலையீடுள்ள ஒன்றாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் அரசியல் செய்கின்றார்.

நேர்மையாக இந்த விடயத்தைக் கையாள்வதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், அதற்கு அப்பால் சென்று அரசாங்கத்தை குழப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே எதிர்க்கட்சித் தலைவரின் தேவையாகும்.

அவர் முன்னால் ஜனாதிபதியின் மகனாவார். அவர் என்ன விளையாட்டுகளுடன் தொடர்புடையவர் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் கிரிக்கெட் விளையாட்டைக் காட்டிக் கொடுத்தேனும் ஆட்சியைக் கைப்பற்றுவதே அவரது இலக்காகவுள்ளது” என்றார்.




# அவுஸ்திரேலியா வெற்றி

பங்களாதேஷ் அணிக்கு எதிராக நடைபெற்ற உலகக் கிண்ண லீக் ஆட்டமொன்றில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் அவுஸ்திரேலியா - பங்களாதேஷ் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் முதலில் பங்களா-தேஷ் அணி துடுப்பெடுத்தாடியது.

அந்த அணியின் தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய தன்சித் ஹாசன் மற்றும் லிட்டன் தாஸ் ஆகியோர் நிதானமாக ஆடி ஓரளவு ஓட்டங்களைச் சேர்த்தனர்.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்காக 76 ஓட்டங்களைச் சேர்த்தது. பின்னர் வந்த டவுஹிட் ஹிர்டாய் (74) அடித்த அரைச்சதம், நஜ்முல் ஹுசைனின் 45 ஓட்டங்கள் மற்றும் அடுத்தடுத்து வந்த வீரர்களால் பங்களாதேஷ் அணி 300 ஓட்டங்களைக் கடந்தது.

இறுதியில் 50 ஓவர்கள் முடிவில் பங்களாதேஷ் அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 306 ஓட்டங்களைக் குவித்தது.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில், அடம் சம்பா, சீன் அப்போட் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து 307 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலிய அணி களமிறங்கியது. தொடக்க வீரர்களாக டிராவிஸ் ஹெட் (10) மற்றும் டேவிட் வோர்னர் (53)ஆகியோர் களமிறங்கினர்.

இவர்களையடுத்து வந்த மிட்சேல் மார்ஷ் (177) மற்றும் ஸ்டீவ் ஸ்மித்(63) ஆகியோர் சிறப்பாக ஆடி இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றனர்.

இறுதியில் அவுஸ்திரேலிய அணி, 44.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரமே இழந்து 307 ஓட்டங்களைக் குவித்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.




**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 8 | 8 | 0 | 0 | 0 | 16 | 2.456 |
| 02 | தென்னாபிரிக்கா | 9 | 7 | 2 | 0 | 0 | 14 | 1.261 |
| 03 | அவுஸ்திரேலியா | 9 | 7 | 2 | 0 | 0 | 14 | 0.841 |
| 04 | நியூஸிலாந்து | 9 | 5 | 4 | 0 | 0 | 10 | 0.743 |
| 05 | பாகிஸ்தான் | 9 | 4 | 5 | 0 | 0 | 8 | -0.199 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 9 | 4 | 5 | 0 | 0 | 8 | -0.336 |
| 07 | இங்கிலாந்து | 9 | 3 | 6 | 0 | 0 | 6 | -0.572 |
| 08 | பங்களாதேஷ் | 9 | 2 | 7 | 0 | 0 | 4 | -1.087 |
| 09 | இலங்கை | 9 | 2 | 7 | 0 | 0 | 4 | -1.419 |
| 10 | நெதர்லாந்து | 8 | 2 | 6 | 0 | 0 | 4 | -1.635 |

# இங்கிலாந்து இலகு வெற்றி வெளியேறியது பாகிஸ்தான்

பாகிஸ்தானுக்கு எதிராக நேற்று நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஆட்டமொன்றில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 44ஆவது லீக் போட்டியில் இங்கிலாந்து–பாகிஸ்தான் அணிகள் மோதின.

இதில் இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்கம் முதல் பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களை சிறப்பாக எதிர்கொண்ட இங்கிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 337 ஓட்டங்களைச் சேர்த்தது.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக பென் ஸ்டோக்ஸ் 84 ஓட்டங்களையும் ஜோ ரூட் 60 ஓட்டங்களையும், பேர்ஸ்டோ 59 ஓட்டங்களையும் சேர்த்திருந்தனர்.

பாகிஸ்தான் சார்பாக பந்துவீச்சில், ஹறீஷ் ராஃப் 3 விக்கெட்டுகளையும், முகமது வாசிம், ஷாகீன் அப்ரிடி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பின்னர் 338 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி களமிறங்கியது.

அந்த அணி 43.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 244 ஓட்டங்களையே சேர்த்தது.

இதன்மூலம் இங்கிலாந்து அணி 93 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பாகிஸ்தான் அணி சார்பாக துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக அகா சல்மான் 51 ஓட்டங்களையும் பாபர் அசாம் 38 ஓட்டங்களையும் முகமது ரிஸ்வான் 36 ஓட்டங்களையும் சேர்த்திருந்தனர்.

இங்கிலாந்து அணி இந்தப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம், அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளது.

அதேவேளை உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியின் அரையிறுதி வாய்ப்பு முற்றிலும் இழந்து தொடரைவிட்டு வெளியேறியது.

## அரையிறுதிகள்

அடுத்த கட்டமாக நடைபெறவுள்ள இரு அரையிறுதியாட்டங்களில் 15ஆம் திகதி நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதியாட்டத்தில் இந்தியா – நியூஸிலாந்து அணிகளும் 16ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதியில் தென்னாபிரிக்கா – அவுஸ்திரேலிய அணிகளும் மோதவுள்ளன.